# தட்சிணாமூர்த்தி திருவருட்பா

தருமை ஆதினம் பத்தாவது குருமகாசன்னிதானம்
**சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அருளியது

## 1. தென்முகப் பரமனின் திருவுரு

பூங்கமல வதனமும், பொழிகருணை நயனமும்,
புன்முறுவல் நிலவெறிப்பும்,
பொலிசடாடவியும், அதில் உறை நிலா மதியும்,
புனை குழை இலங்கு காதும்,
தேங்கு பரமானந்த சின்மயானந்த காயமாம்
சித்தி அருள் முத்திரையும், மேல்
சிவனானுபவம் நீங்கினோர் சேர அருள் செபமாலை,
சிவஞான புத்தகமும், ஓர்
வேங்கை அதன் உடையும், சரற்கால மதிகோடி
வெள்ளமென நிறை வடிவமும்,
“மேலான தெய்வம் நாம் அன்றி வேறு இல்லை இது
மெய்!” என்று எடுத்த கனலும்
ஓங்க வடவாலடியில் உறைகின்ற தெய்வமே!
உன்னையன்றி வேறு நினையேன்
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரம சிவமே.

## 2. மும்மலப் பேய்களின் போராட்டம்

சீராரும் நின் தேஜோமயானந்த
தெரிசங் காட்டு பகலே
தேகாதியாகும் ப்ரபஞ்ச இருளாகியே
திண்டாடும் மும்மலப் பேய்
போராடுது என்னுடன், நான் ஏழை, அதனுடன்
போராட முடிவதில்லை,
புலையாடல் ஒருநாள் இரண்டு நாளோ? இது
பொறுக்கவும் படுவதில்லை
ஆரோடு சொல்லி என் குறையாறுவேன்? எனக்கு
அன்னையே! அப்பனே! உன்
ஆறுதலையன்றி வேறில்லை, நீ நழுவவிடில்
அடியேன் அலைந்து போவேன்
ஓராலின் நீழலில் உறைந்து சனகாதியர்க்கு

உள்ளபடி அருள் தெய்வமே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

## 3. கருணைப் பெருங்கடல்

இரவிசத கோடி இருட்டென்ன ஒளிவெயில்
எறிக்கும் ப்ரசண்ட பானு,
எண்ணிலா மதி வடவை என்னவே குளிர்நிலா
எழுகின்ற சந்த்ரோதயம்,
அரிபிரமர் இந்த்ராதி செல்வம் நல்குரவென்னும்
அளவிலாப் பெரிய செல்வம்,
அண்டகோடிகளை அணுவென்ற குணமேருகிரி,
அமுதை வேம்பென்ற அமுதம்,
பெரிய பிரமப் பிரளயம் சிறிய துளியென்று
பேசுங் க்ருபாம்புராசி,
பிரபஞ்சமதனில் உளதெய்வம் எல்லாமும்
பிறந்தலையும் என நகைத்தே
உருவில் அனாதியே! உற்ற சித்ரூபியாய்
உறைகின்ற பரதெய்வமே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

## 4. மலைத்தேன் என மலைத்தேன்

தந்த்ரகலை அறிவனோ? மந்த்ரகலை அறிவனோ?
சாரும் உபதேச கலையில்
தந்த கயிலாச பாரம்பரிய மாகவரு
சம்ப்ரதாயம் அறிவனோ?
அந்தரத்து உயர்மலைத் தேனினுக்கு ஓர்முடவன்
ஆசைவைத்தது போலவே
ஐயனே! நின் அருளை அடைவதற்காசை வைத்து
அடியேன் முகம்வீங்கி நின்றேன்,
சந்த்ரசேகர! சகள! நிஷ்கள! தயாபர!
சதாசிவ! சிதாகாயமாம்
சபாநாத! சுந்தரானந்த கல்யாண குண
சர்வேச! தேவதேவ!
உந்துந் தரங்கமெறி கங்காதரா! கயிலை
உறைகின்ற பரதெய்வமே!
ஒன்றாகி, ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

## 5. உல்லாச பரமகுரு

பொல்லாத பாவங்கள் கோடானு கோடியிப்
புவிமிசையிலோர் வடிவமாய்ப்
புலையனேன் உனைமறந்தனுதினம் செய்துவரு
பொல்லாத வினை எண்ணிலேன்
அல்லாரு மலமாயை கருமங்கள் அணுகாத
அகள நிட்பிரபஞ்சமாம்
அகளங்க சுத்த நித்யானந்த அனுபவம்
அணுவளவும் வந்ததில்லை
நல்லார் முன் நணுகாத நமதூதர் கொண்டுபோய்
நரகிலே விடுவரென்று
நடுநடுங்கா நின்ற துள்ளம், உனை நம்பினேன்
நம்பினேன் வடகயிலையாய்!
உல்லாச பரமகுருநாதனே! ஆலடியில்
உறைகின்ற பரதெய்வமே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

## 6. ஞானமும் துறவும்

பெரிய பரமானந்த பரமசுகவாழ்வு இப்
பிறப்பிலே வருவதன்றிப்
பிரபஞ்ச வாழ்க்கை எல்லாமும் விட்டுதறியே
பெண்ணாசை மண்ணாசையும்
இரணியத் தாசையும் ‘சீ’ என்று விட்டெறிந்
தேகாந்தமாய் இருந்தால்
இவ்விலகில் இடரேதும் இல்லாமல் வருமின்பம்
யாவர்க்கும் இல்லையென்று
தெரிய மறை சொல்லவும் பெரியவர்கள் சொல்லவும்
தீரத்துறந் திராத
சிறியவன் இவனென்றோ பராமுகமதாகவே
தேவரீர் நின்ற செய்தி!
உரிய துறவுடன் ஞானம் உதவுவதும் நீரன்றி
ஒரு தெய்வம் வேறில்லையே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

## 7. பரமானந்த நிர்த்தன்

சரியை தனில் வல்லனோ? கிரியை தனில் வல்லனோ?
தகுயோகமதில் வல்லனோ?
தவமதனில் வல்லனோ? உபரதியில் வல்லனோ?
தருபத்திதனில் வல்லனோ?
அரிபிரமர் காணாத அகண்ட பரிபூரண சச்சி
தானந்த சிவஞானமாம்
அதையுணர வல்லனோ? ஆகாத ப்ரபஞ்சம்
அதையுணரும் வல்லமையிலே
பெரியனே ஆயினும் மேலான அனுபவம்
பெற்றவர்கள் போலிருந்து
பெருங்கபட நாடகம் நடிப்போர்க்கும் நின்னருட்
பிரகாசம் ஆகுமோ? சொல்!
உரியபரமானந்த நிர்த்தனே! வடகயிலையிலே
உறைகின்ற பரதெய்வமே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

## 8. ஆனந்த அருள்மழை

மோகந் தரித்தவர்கள் மாதரைக் கூடியே
மோகந் தணிப்பர் அதுபோல்
முதுபசி தரித்தவர்கள் அன்னம் புசித்துலகில்
முதுபசி தணிப்பர் அதுபோல்
பாகந் தரித்தவர்கள் சற்குருவின் நோக்கப்
பயோததி படிந்தே பிர
பஞ்ச வெப்பம் தணிப்பார்கள் என்று
பலகலைகள் சொல்லவும் கேட்டு
ஆகந்தரித்த மலவடவையாற் சூடுண்டு
ஐயனே! நின் கடைக்கண்
ஆனந்த அருள்மழையில் மூழ்க வழிபாராமல்
அவமாக நாள் கழித்தேன்,
ஊகங் கொடுத்து அருளை அடையும் வழி அருளுவாய்
ஓங்கு குருபர நாதனே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

## 9. தன்மயம் சுபாவம்

பொன்னினை விழுங்குமொரு ரசகுளிகை போலவும்,
பூத இருள்தனை விழுங்கும்
பூர்ண சந்த்ரோதயம் போலவும், சந்திரன்
பொன்னொளியை உள்விழுங்கும்
மன்னும் ஆயிரகோடி சூரியர்கள் போலவும்,
வல்லிரும்பினை விழுங்கும்
மண்டுகனல் போலவும், உப்பினை விழுங்கிடும்
வாரிநீரைப் போலவும்,
என்னைநீ உள்விழுங்கிக் கொண்டிருப்பது இனி
எக்காலம் எக்காலம் என்று
ஏழையேன் அழுதழுது வாடவும் திருவுள்ளம்
இன்னமும் இரங்கவில்லையே,
உன்னருள் இரங்கும் நாள் எந்தநாள்? ஆலடியில்
உறைகின்ற பரதெய்வமே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

## 10. இறுமாந்த பெருவாழ்வு

அண்டர் தொழும் இந்திராதி வாழ்வையும் விரும்பிடேன்,
அட்டசித்தியும் விரும்பிடேன்,
அகில கலைஞானமும் விரும்பிடேன், உலகு புகழ்
அரிய கீர்த்தியும் விரும்பேன்,
பண்டை மலம் எல்லாம் ஒழித்துநின் அருள் பெற்ற
பழைய அடியார்கள் அடியார்
பாத தாமரைகள் என்தலைமேல் வைத்தருட்
பார்வையால் இருளகற்றித்
தொண்டு செய்தரிய பரமானந்த வெள்ளம்
துதைந்து விளையாடி உலகம்
தோன்றாமல் இறுமாந்திருக்கின்ற பெருவாழ்வு
தொண்டனேன் வேண்டினேன் வண்டு
உண்டிடும் கொன்றையணி அண்டர் நாயகா! கயிலை
உறைகின்ற பரதெய்வமே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!